தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 5, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 ஆகஸ்ட் 21, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு."

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

1. அறிவிப்பு

முதலமைச்சரின் நூறு நாள் ஆட்சிக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆட்சிக்கு இது 100-வது நாள். இந்த 100 நாட்களில் தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து மகத்தான மக்கள் சாதனை புரிந்த முதலமைச்சர் அவர்களை சட்டப் பேரவையின் சார்பாக வாழ்த்தி முதல் கேள்வியை எடுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். முதல் வினா, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[21 ஆகஸ்ட் 2001

1—

நல்லொழுக்கப் பயிற்சி

***4039–திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறை அலுவலர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்காக 4.3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதியிலிருந்து 8.54 இலட்சம் ரூபாய் செலவில் 4200 பெண் காவலர்களுக்கு, ஆண், பெண் ஆகிய இருபாலரையும் மதிக்கச் செய்யும் பயிற்சி (gender sensitization) அளிப்பதற்காக 10-8-2001 அன்று நான் ஒப்புதல் வழங்கியுள்ளேன். எஞ்சியுள்ள 80,000 ஆண் காவலர்களுக்கு 92 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்த் தாயின் தலைமகனே, பரணி போற்றும் இந்த 12-வது சட்டப் பேரவையின் முதல் வினாவை பேரவையில் எழுப்பும் அரிய வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு தங்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் வணங்கும் அன்னை, நடமாடும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திக்கை நோக்கி என்னுடைய வணக்கத்தைச் செலுத்தி, நான் அந்த வாய்ப்பைப் பெறும் வகையில் என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், என் செஞ்சி தொகுதி மக்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். முதல் கேள்விக்கே ‘ஆம்’ என்ற பதிலை அளித்து காவலர் பயிற்சிக்கு 4.3

21 ஆகஸ்ட் 2001]

கோடி ரூபாய் ஒதுக்கியதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி. எங்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கும், என்னுடைய செஞ்சி தாலுகாவிற்கும் இந்த ஆண்டு எவ்வளவு நிதி இப்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சிக்காக ஒட்டுமொத்தமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வெ. ஏழுமலை.*

திரு. வெ. ஏழுமலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.3 கோடி ரூபாய் பயிற்சிக்காக ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். நான் அதை மனமார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். காவலர்கள் பொது மக்களுடைய நண்பர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். காவல் துறையைப் பொறுத்தவரையிலே நல்ல காவல் துறை அதிகாரிகள் எல்லாம் இருக்கின்ற நேரத்திலே அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேநேரத்திலே காவல் நிலையங்களிலே பொது மக்களைப் பல்வேறு நிலைகளிலே கொடுமைப்படுத்தக்கூடிய செய்தி தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிக் கொடுமைப்படுத்தக்கூடிய செய்திகள் எல்லாம் வராமல், பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய, சட்டம் ஒழுங்கைக் காக்கக்கூடிய காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்கள் வரம்பு மீறிச் செயல்படாமல், சட்டத்திற்கு உட்பட்டு, சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றக்கூடிய வகையிலே நடைமுறைப்படுத்துவதற்குண்டான பயிற்சியும் சேர்த்து வழங்கப்படுமா என்று அறிவதோடு, காவல் துறையில் உள்ளவர்கள் கால வரம்பு இல்லாமல் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு 8 மணி நேரம் என்ற கால வரம்பையும், அதேநேரத்திலே மற்ற துறைகளுக்கு இணையான ஊதியத்தையும் அவர்களுக்கு அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[21 ஆகஸ்ட் 2001

முற்பகல் 10-05

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாக காவலர்களின் ஒழுக்க நெறி குறைந்து வருவதாக அறியப்பட்டு, அதனைப் போக்குவதற்காக அனைத்துக் காவலர்களுக்கும், குறிப்பாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலுள்ள பெண் காவலர்களுக்குப் பணி உணர்வு மேம்பாட்டுப் பயிற்சி* — re-sensitization training — *அளிக்க, காவல் துறையின் பணிகளை ஆய்வு செய்தபோது நான் முடிவு செய்தேன். இந்தப் பயிற்சி வகுப்புகள் 20-8-2001 முதல்-அதாவது நேற்று முதல் சென்னையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் தொடங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பெண் காவலர்களுக்குப் புத்துணர்வு ஊட்டும் பொருட்டு, தற்போது அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலுள்ள பெண் காவலர்களை மாற்றுவது மட்டுமல்லாமல், புதிதாக நியமனம் செய்யப்பட உள்ள பெண் காவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்தப் பயிற்சி சென்னையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில், ஒவ்வொரு பிரிவிலும் அதாவது ஒவ்வொரு batch-*லும் 100 பெண் காவலர்கள் வீதம் 42 பிரிவுகளில் 4200 பெண் காவலர்களுக்கு 5 நாள் பயிற்சியாக அளிக்கப்படும். மகளிரின் பிரச்சினைகள் பற்றி வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், மனநல நிபுணர்கள், மனித உரிமை வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டும், தகுந்த காவல் அதிகாரிகளைக் கொண்டும் இந்தப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.*

பெண் காவலர்களைத் தவிர ஆண் காவலர்கள் சுமார் 80 ஆயிரம் நபர்களுக்கு இதேபோன்ற பயிற்சி அளிக்கப்பட உள்ளது. சென்னையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரி இந்தப் பயிற்சிக்கான பாடத் திட்டங்களையும், பயிற்சி அளிப்பவர்களையும் தேர்வு செய்யும். இந்தப் பயிற்சியை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும், காவல் துறை ஆணையாளர்களும் அளிப்பார்கள். காவல் துறை இயக்குநர் (பயிற்சி), மாநிலம் முழுவதும் ஒரே சமயத்தில் அளிக்கப்பட இருக்கும் இந்தப் பயிற்சியை ஒருங்கிணைத்து நடத்துவார். இந்தப் பயிற்சியும் 5 நாட்கள் கொண்டதாகவும், 50 நபர்கள் கொண்ட பிரிவுகளாகவும் இருக்கும். காவலர்கள் சமுதாய நல்லுணர்வோடு பொது மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அளவுக்குப் புத்துணர்வு பெறவும், காவல் துறையினர் பொது மக்களின் நண்பர்களாகப் பணியாற்றும் வகையில் மாற்றங்கள் ஏற்படவும் இந்தப் பயிற்சி வழிவகை செய்யும் என்று நான் நம்புகிறேன்.

21 ஆகஸ்ட் 2001]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், மேலும் காவலர்கள் பணி செய்யும் காலம் குறித்தும், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் குறித்தும் சில கேள்விகளை இங்கே எழுப்பினார். காவலர்களின் பணி செய்யும் நேரத்தைக் கட்டுப்படுத்துவது குறித்தும், அவர்களின் ஊதியம் அதிகரிக்கப்படுவது குறித்தும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.*

திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். இப்போது தமிழகத்திலே புதிதாகக் காவலர்களைத் தேர்வு செய்வதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிய காவலர்களை நியமனம் செய்வதற்கான முயற்சி எப்போது மேற்கொள்ளப்படும்?*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவரகளே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தக் கேள்வி நல்லொழுக்கப் பயிற்சியைப் பற்றியது. இதுதொடர்பாக இருந்தால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.*

திரு. கே.சி. கருணாகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை நவீனப்படுத்துவது சம்பந்தமாகவும், பயிற்சி அளிப்பது சம்பந்தமாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற அறிவிப்புக்கு நன்றி. மனித உரிமைகள் பற்றி அதிகமாகப் பேசப்படுகிற இந்தக் காலத்தில், காவலர்கள் மனிதர்களாக அங்கீகரிக்கப்படுவதற்கும், அவர்களது உரிமைகளை எடுத்துப் பேசுவதற்குமான சங்கம் வைக்கும் உரிமை வழங்கும் திட்டம் உண்டா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள கேள்வி, காவல் துறை அலுவலர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா, ஆம் எனில், விவரம் என்ன என்ற கேள்விதான். ஆகவே, இதற்கு வேண்டுமானால் துணைக் கேள்விகள் போடலாமே தவிர, வேறு

கேள்விகளைக் கேட்பதாக இருந்தால், தனிக் கேள்வி போட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, காவலர்கள் பொது மக்களிடம் அணுகுகிறபோதும் சரி, குற்றவாளிகளைப் பிடித்து வருகிறபோதும் சரி, கொஞ்சம் தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்தி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், கேள்வி நல்லொழுக்கப் பயிற்சியைப் பற்றியது. நீங்கள் காவல் துறை பற்றி முழுவதுமாகக் கேட்டால் பதில் சொல்ல முடியாது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்து, அவர்கள் எப்படி மனிதத்தன்மையோடு பழகி, பொதுவாக, திட்டுவதையோ, கொஞ்சம் கொடூரமாகப் பேசுவதையோ தவிர்ப்பதற்கான முழு முயற்சியை எடுத்து, அவர்களுக்கு ஆன்மீகத் துறையிலும் ஓரளவிற்குப் பயிற்சி கொடுத்து, ஆன்மீகம்தான் பொதுவாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், நீங்கள் காக்கி உடையைக் காவி உடையாக ஆக்கிவிடுவீர்கள் போலிருக்கிறது. சாமியாராகப் போய் விட்டார்களானால் அப்புறம் எப்படி அவர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது?

முற்பகல் 10-10

திரு. சி. ஞானசேகரன்: நல்லமுறையில் குற்றவாளிகளை சரியாக நடத்துவதற்கும், பொது மக்களிடம் சரியான முறையில் அணுகிப் பேசுவதற்கும் வகுப்புகள் மூலம் காவலர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்படுமா? பொதுவாக பெண் காவலர்கள், ஆண் காவலர்களாலும் பொது மக்களாலும்கூட சில நேரங்களில் eve-teasing-க்கு ஆளாகிறார்கள். அதிலிருந்து பெண் காவலர்களைக் காப்பாற்றுவதற்கு தனிப்பட்ட முறையிலே ஏதாவது நடவடிக்கை எடுத்து, அவர்கள் eve-teasing-க்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

21 ஆகஸ்ட் 2001]

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜூன் மாதம் காவல் துறையின் செயல்பாடு பற்றி 2 நாட்கள் ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின்போது தெரிய வந்த உண்மை என்னவென்றால், காவலர்களுக்கு re-sensitization மிகவும் அவசியம் என்பது தெரிய வந்தது. சில சமயங்களில் காவலர்கள் தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். உண்மைதான். ஆனால், சமூக விரோதிகள்கூட காவலர்களைப் பார்த்து தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் காவலர்களைப் பார்த்து அவர்கள் கேவலமான வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்துகிறார்கள். அண்மையில்கூட இதற்கான உதாரணங்களை சென்னையிலேயே பார்த்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரிவித்ததுபோல, பெண் காவலர்கள்கூட eve-teasing-க்கு ஆளாக்கப்படுகிறார்கள். கடந்த 5 ஆண்டு காலமாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் கவனிப்பாரற்ற நிலையில் கிடந்ததால், இந்தக் காவல் நிலையங்கள் அன்றைய அரசாங்கத்தால் உதாசீனப்படுத்தப்பட்டு புறக்கணிக் கப்பட்டதால், கேட்பாரற்றுக் கிடந்ததால், இந்தக் காவல் நிலையங்களின் செயல்பாடு சீர்குலைந்துவிட்டது. அங்கே நியமிக்கப்பட்டிருந்த பெண் காவலர்களின் போக்கும் அதிருப்தி ஏற்படுத்துவதாக உருவாகிவிட்டது. அதனால்தான் நான் ஆய்வு நடத்தியபோது இந்த உண்மைகளைக் கண்டறிந்து, தற்போது இயங்கிக்கொண்டு இருக்கிற 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் உள்ள பெண் காவலர்களை ஒட்டுமொத்தமாக மாற்றி, அவர்களை வேறு பணியிடங்களில் அமர்த்தி ஒரு sensitization பயிற்சி அளிக்கப்பட்ட பிறகு, புதிய பெண் காவலர்களை இந்த 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் பணியமர்த்துவது என்று முடிவு எடுத்து இருக்கிறேன். அதோடு, ஏற்கெனவே அங்கே பணியில் இருந்த பெண் காவலர்களுக்கும் புதிதாக ஒரு refresher course—sensitization programme பயிற்சி அளிக்கப்படும். பொதுவாகக் காவலர்கள் இருமுனைக் கொள்கையைப் பயன்படுத்த வேண்டும், கடைப்பிடிக்க வேண்டும் என்று அண்மையில் நடைபெற்ற கலெக்டர்கள், காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் நான் அறிவுரை வழங்கினேன். அப்போது காவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது என்னவென்றால், பொது மக்களை அணுகும்போது அவர்கள் பொது மக்களிடம் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும். சமூக விரோதிகளிடம் அவர்கள் கண்டிப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் காவல் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அலுவலர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிக்கும்போது, நாங்கள் வணங்குகிற தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாரக மந்திரமான, பொது மக்களிடத்தில் அன்பாக நடந்துகொள்வதற்கும், அறிவுபூர்வமாக வழக்குகளை விசாரிப்பதற்கும், பிரிவினைவாத மற்றும் பயங்கரக் குற்றவாளிகளைத் துணிவோடு தடுக்கும் விதத்திலும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். அத்தகைய பயிற்சிதான் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அலுவலர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிக்கின்ற திட்டம் என்பது குறித்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபோது, காவலர்களுக்கு அளிக்கக்கூடிய பயிற்சி நிலைகளை எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், அலுவலர்கள் என்கின்றபோது, எஸ்.பி. லெவலில், டி.எஸ்.பி. லெவலில், டி.ஐ.ஜி. லெவலில், டி.ஜி.பி. லெவலில், சிட்டி கமிஷனர் உட்பட இந்த நல்லொழுக்கப் பயிற்சி, மனிதாபிமானப் பயிற்சி, மனிதநேயப் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா? அல்லது அலுவலர்களுக்கு மட்டும் அந்தப் பயிற்சி கிடையாது, காவலர்களுக்கு மட்டும்தான் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லொழுக்கப் பயிற்சி என்பது மேலிருந்து கீழ்வரை எல்லோருக்கும் பொருந்தும். D.G.P., A.D.G.P., I.G., D.I.G., S.P. level வரை உள்ள அதிகாரிகளுக்கு நானே அறிவுரை கூறி அவர்களை re-sensitize செய்து வருகிறேன். அவர்களுக்குக் கீழே உள்ள அலுவலர்களுக்கும் காவலர்களுக்கும், மாவட்டக் கண்காணிப்பாளர்களும்—S.P.-க்களும், D.I.G.-க்களும் பயிற்சி அளிப்பார்கள்.

21 ஆகஸ்ட் 2001]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி.*

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிப்பது என்பது தொடர்ந்து ஆண்டுதோறும் அளிக்கப்படுமா, இல்லை ஒரு காலகட்டத்தோடு, இந்தப் பயிற்சிகள் முடிந்த பின்னால் பயிற்சி நிலையங்கள் நடத்துவது முடிந்துவிடுமா? அனைத்துக் காவலர்களுக்கும் பள்ளிகளைப் போன்று தொடர்ந்து பயிற்சி அளிப்பதற்கான திட்டங்கள் அரசிடத்தில் உள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எனது பதிலில் விரிவாகக் குறிப்பிட்டேன். இது ஐந்து நாள் பயிற்சி - - 5 days course என்று.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 2, திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.*

திரு. ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்னும் எத்தனையோ வாய்ப்புகள் வரும், உட்காருங்கள். அடுத்து வாய்ப்புகள் வரும், உட்காருங்கள்.*

2—

நிதி நிறுவனம்

***1850—திரு. பி.ஆர். சுந்தரம்:**
திரு. கா. கந்தசாமி:

மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி நிறுவன மோசடிகள் தொடர்பாக அரசு மேற்கொண்டுள்ள தடுப்பு நடவடிக்கைகள் யாது?

(ஆ) நிதி நிறுவனங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா?